# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

C17/AC/2019

1. District மாவட்டம்: சேலம் | PS காவல்நிலையம்: ஊ.த.பிரிவு | Year ஆண்டு: 2019 | FIR No.: மு.த.அ. எண் | Date நாள்: 05/08/2019.

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு (திருத்த) சட்டம் 2018. Sections பிரிவுகள்: 7 (a)

(ii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -

(iii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: -

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்

Date from : நாள் முதல்

Date to : நாள் வரை 1) 11.7.2019 - மதியம் சுமார் 1200 மணி. 2) 16.7.2019 - காலை 11 மணி.

Time Period : நேர அளவு

Time from : நேரம் முதல்

Time to நேரம் வரை 3) 2.8.2019 - காலை 11½ மணி

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.8.2019

Time நேரம் 11.00 மணி.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.08.2019

Time நேரம் 11.00 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 30 கிமீ வடமேற்கு.

Beat Number : முறைக் காவல் எண் -

(b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், கருப்பட்டி காடையாம்பட்டி வட்டம், சேலம் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. மணி.

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. நாராயணன்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு -

(d) Nationality : நாட்டினம் இந்தியர்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் விவசாயம்.

(g) Address முகவரி 56, ஒத்திகத்தியான் காடு, கருப்பட்டி, காடையாம்பட்டி வட்டம், சேலம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு. ரங்கநாதன், கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், கருப்பட்டி, காடையாம்பட்டி வட்டம், சேலம் மாவட்டம்.

2) திரு. ராஜா, கிராம உதவியாளர், கிராம நிர்வாக அலுவலகம், கருப்பட்டி, காடையாம்பட்டி வட்டம், சேலம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு N. மணி. 5-8-19

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதியும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
N.K. ரவிச்சந்திரன்.

Name: பெயர் காவல் ஆய்வாளர்
Rank: நிலை

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/AC/2019 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை படிவம் வரிசை எண்.12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :</u> சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரான நான் இன்று 05.08.2019 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், நடுப்பட்டி, 56, தெற்கத்தியான்காட்டை சேர்ந்த நாராயணன் மகன் திரு.மணி என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அப்புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் மணி, த/பெ நாராயணன், 56, தெற்கத்தியான்காடு, நடுப்பட்டி, காடையாம்பட்டி வட்டம், சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, சேலம். அய்யா, நான் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், நடுப்பட்டி தெற்கத்தியான் காட்டில் குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளேன். எனது பெயரிலும், என்னுடைய தந்தை பெயரிலும் சுமார் 3 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. விவசாயத்தில் போதிய வருமானம் இல்லாததால், சிறிய அளவிலான கட்டுமான ஒப்பந்தப்பணிகளை செய்யலாம் என்று முடிவு செய்தேன். ஒப்பந்ததாரராக வேண்டுமென்றால் சால்வன்சி சான்றிதழ் பெற வேண்டுமென்று விபரம் தெரிந்தவர்கள் சொன்னதால் நான் ரூபாய் 5 லட்சத்திற்கு சால்வன்சி சான்று பெற முடிவு செய்து அதற்கு தேவையான ஆவணங்களான சிட்டா, அடங்கல், பட்டா ஆகியவற்றை பெற வேண்டி கடந்த ஜூன் மாதம் கம்ப்யூட்டர் பட்டா மட்டும் பெற்றுக்கொண்டேன். பிறகு 2.7.2019 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நடுப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் ரங்கநாதன் அவர்களை அவரின் அலுவலகத்தில் சந்தித்து சொத்து விபரச்சான்றிதழ், அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவற்றை கொடுக்குமாறு கேட்டேன். அப்போது கிராம உதவியாளர் ராஜாவும் உடன் இருந்தார். நான் மேற்படி சான்றிதழ்களை கேட்டபோது கிராம நிர்வாக அலுவலர் ரங்கநாதன் கிராம உதவியாளர் ராஜாவை பார்த்து பேசிவிட்டு வருமாறு சொன்னார். நானும், ராஜாவை பார்த்தபோது அவர் என்னை சற்று தூரம் தனியாக கூட்டிச்சென்று விபரத்தை கேட்டார். நான் மேற்படி சான்றிதழ்களை சால்வன்சி சான்றிதழ் பெறுவதற்காக

கேட்பதாக கூறினேன். அதற்கு அவர் சொத்து விபரச்சான்றிதழ், அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவற்றை பெற வேண்டுமென்றால் கொஞ்சம் செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் இப்போதுதான் புதியதாக ஒரு தொழில் செய்யலாம் என்று நினைத்து வேலையை துவங்கியுள்ளேன். இப்போதே என்னிடம் பணம் கேட்டால் எப்படி கொடுப்பது என்று கேட்டேன். அதற்கு அவர் நான் சொன்னதை கேட்டுவிட்டு என்னை அங்கேயே நிற்க சொல்லிவிட்டு அவர் மட்டும் கிராம நிர்வாக அலுவலர் ரங்கநாதனை பார்த்து ஏதோ பேசிவிட்டு என்னிடம் வந்து சரி நீங்கள் சால்வன்சி சான்றிதழ் பெற வேண்டுமென்றால் மீண்டும் எங்களிடம்தான் வர வேண்டும், அப்போது உங்களிடம் பணத்தை சேர்த்து வாங்கிக்கொள்ளலாம் என்று வி.ஏ.ஓ சொல்லிவிட்டார் என்று சொல்லி சால்வன்சி சான்றிதழ் பெறும்போது இந்த செலவுக்கும் சேர்த்து கவனித்து விடுங்கள் என்று சொன்னார். பிறகு என்னை கிராம நிர்வாக அலுவலரிடம் அழைத்துச்சென்று நான் கேட்ட மேற்படி சொத்து விபரச்சான்றிதழ், அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவற்றை வி.ஏ.ஓவிடம் வாங்கி கொடுத்து அனுப்பினார். பிறகு அடுத்த நாள் 3.7.2019 ஆம் தேதி மேற்படி சான்றிதழ்களுடன் காடையாம்பட்டி தாலுக்கா அலுவலகத்தில் உள்ள இ.சேவை மையத்தில் சால்வன்சி சான்றிதழ் (செல்வநிலை சான்றிதழ்) பெறுவதற்காக ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். பின்னர் 11.7.2019 ஆம் தேதி மதியம் சுமார் 12 மணியளவில் நான் நடுப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் ரங்கநாதன் அவர்களை பார்த்து சால்வன்சி சான்றிதழுக்கு தாலுக்கா அலுவலகத்தில் உள்ள இ சேவை மையத்தில் ஆன்லைனில் பதிவு செய்த விபரத்தைச் சொன்னேன். அப்போது கிராம உதவியாளர் ராஜாவும் உடன் இருந்தார். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.ரங்கநாதன் அவர்கள் என்னிடம் 1 லட்சம் ரூபாய்க்கு ரூபாய் 400 வீதம் மொத்தம் 5 லட்சம் ரூபாய்க்கு ரூ.2,000/– அரசுக்கு கட்ட வேண்டும் என்றும், அதற்கு காடையாம்பட்டி தாலுக்கா அலுவலகம் சென்று அந்த அலுவலகத்திற்கு முன்புறம் உள்ள ஜெராக்ஸ் கடையில் இதற்காக விற்கும் படிவத்தை வாங்கி, பூர்த்தி செய்து, அந்த படிவத்தில் தாலுக்கா அலுவலக சீலை வைத்துக் கொண்டு ஓமலூர் சென்று அங்குள்ள ஸ்டேட் பேங்கில் ரூ.2,000/– பணத்தை கட்டிவிட்டு பின்பு அந்த பணம் கட்டியதற்கான சலானை வாங்கி வந்து தன்னிடம் கொடுக்குமாறும் அவ்வாறு வரும்போது என்னுடைய நிலத்தின் பத்திர ஜெராக்ஸ் நகலையும், கம்ப்யூட்டர் பட்டாவையும்

கொண்டுவந்து கொடுக்கும்படியும் அத்தோடு சால்வன்சி சர்ட்டிபிகேட் பெற ஏற்பாடு செய்வதற்கு தனியாக பணம் ரூ.15,000/– த்தை கொண்டு வரும்படியும் சொன்னார். அதற்கு நான் சால்வன்சி சர்ட்டிபிகேட் பெறுவதற்கு 15,000/– கொடுக்கனுமா என்றும். என்னால் அவ்வளவு தொகை கொடுக்க முடியாது என்றும் சொன்னேன். அதற்கு ராஜா என்னிடம் எல்லோரிடமும் கேட்பதை விட உங்களுக்கு மிகவும் குறைவாகத்தான் சொல்லியிருக்கிறார் என்றும் இதற்கு மேல் எல்லாம் குறைக்க முடியாது என்றும் சொன்னார். அப்போது கிராம நிர்வாக அலுவலர் திரு.ரங்கநாதன் அவர்கள் என்னிடம் ரூ.15,000/– நீங்கள் கொடுத்துவிட்டால், ஆர். ஐ, டெபுடி தாசில்தார் மற்றும் தாசில்தார் எல்லோரிடமும் வேலையை முடித்து தாங்களே சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுத்து விடுவதாகவும். இல்லையென்றால் நீங்கள்தான் அலைய வேண்டும் என்றும், எவ்வளவு அலைந்தாலும் தாங்கள் சொன்ன பணத்தைக் கொடுக்காவிட்டால் சால்வன்சி சர்ட்டிபிகேட்டை வாங்க முடியாது என்றும் சொன்னார். நான் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு காடையாம்பட்டி தாலுக்கா அலுவலகம் சென்று அங்கு அருகில் இருந்த ஒரு ஜெராக்ஸ் கடையில் பணம் செலுத்தும் படிவத்தை வாங்கிக்கொண்டு தாலுக்கா அலுவலகத்தில் இருந்த ஒருவர் மூலமே அந்த படிவத்தை பூர்த்தி செய்து கொண்டு தாலுக்கா அலுவலகத்தில் சீல் கேட்டு பெற்றுக்கொண்டேன். அப்போது நேரம் மாலை சுமார் 4.30 மணி ஆகிவிட்டதால் அன்று பணம் கட்டமுடியாது என்று தெரிந்து கொண்டு வீட்டிற்கு போய்விட்டேன். அடுத்தநாள் 12.7.2019 ஆம் தேதி ஓமலூர் ஸ்டேட் பேங்கில் ரூபாய்.2,000/- த்தை செலுத்தி சலானை பெற்றுக்கொண்டேன். எனது தோட்டத்தில் எனக்கு அதிக வேலை இருந்ததால் நான் இரண்டு மூன்று நாட்கள் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் செல்ல முடியவில்லை. பின்னர் கடந்த 16.7.2019 ஆம் தேதி காலை 11 மணியளவில் நான் நடுப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.ரங்கநாதனை அவரது அலுவலகத்தில் சென்று பார்த்து அவரிடம் பேங்கில் ரூ.2,000/– செலுத்தியதற்கான சலானையும், எனது நிலத்தின் பத்திர நகலையும் மற்றும் கம்ப்யூட்டர் பட்டா நகலையும் கொடுத்து எனக்கு சால்வன்சி சான்றிதழ் பெற ஏற்பாடு செய்யும்படியும் கேட்டேன். அங்கு கிராம உதவியாளர் ராஜாவும் அவருடன் இருந்தார். அப்போது கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் தான் கேட்ட பணம் ரூ.15,000/– என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் சார், தொகை அதிகமாக

இருப்பதால் என்னால் பணத்தை புரட்ட முடியவில்லை என்று சொன்னேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் சீக்கிரமாக பணத்தை ரெடி செய்துகிட்டு வந்தால்தான் சால்வன்சிக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று சொல்லி அனுப்பி விட்டார். ஆனால் என்னால் பணம் ரெடி செய்யமுடியவில்லை. அவர்கேட்ட தொகை மிகவும் அதிகமாக இருந்ததால் கொஞ்சம் குறைச்சிக்கச் சொல்லி கேட்டுப் பார்க்கலாம் என்று 02.8.2019 ஆம் தேதி மதியம் 11 ½ மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு.ரங்கநாதனைப் பார்த்து! சார், 15,000/– என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது என்றும், பணம் புரட்டுவதற்கு சிரமமாக உள்ளது, கொஞ்சம் குறைச்சி சொல்லுங்க சார் என்றும் கேட்டேன். அப்போது கிராம உதவியாளர் திரு.ராஜாவும் அங்கு இருந்தார். அப்போது கிராம நிர்வாக அலுவலர் திரு.ரங்கநாதன் அவர்கள் என்னிடம் நான் ஏற்கனவே உங்களிடம் விளக்கமாக சொல்லிவிட்டேன். திருப்பி, திருப்பி வந்து கேட்காதீங்க என்று சொன்னார். அதற்கு திரு.ராஜா எல்லாத்தையும் விட உங்களுக்கு குறைவாகத்தான் சொல்லியிருக்கிறோம். இதற்கு மேல் எல்லாம் குறைக்க முடியாது என்று சொன்னார். கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் நீங்கள் விண்ணப்பம் கொடுத்து ஏற்கனவே லேட்டாகி விட்டது, நீங்க சீக்கிரமா பணம் ரூ.15,000/–த்தைக் கொண்டு வந்து கொடுத்துடனும், இல்லைன்னா உங்க விண்ணப்பம் ரிஜெக்ட் ஆகி விடும் என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டார். நான் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். எனக்கு சால்வன்சி சர்ட்டிபிகேட் வழங்க ஏற்பாடு செய்வதற்கு நடுப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் ரங்கநாதனுக்கும், கிராம உதவியாளர் ராஜாவுக்கும் அவர்கள் லஞ்சமாக கேட்ட ரூபாய்.15,000/-த்தை கொடுத்து மேற்படி சால்வன்சி சர்ட்டிபிகேட்டைப் பெற எனக்கு விருப்பமில்லை. எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx (N.மணி) 05.08.2019.

Sir, Received the above computer typed complaint on 05.08.2019 at 11.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad.

Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.17/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 today on 05.08.2019 at 13.00 hrs and took up for investigation. Sd xxxx (N.K. RAVICHANDRAN) 05.08.2019, INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.Mani, S/o. Narayanan, 56, Therkathiyan Kadu, Nadupatti, Kadayampatti Taluk, Salem District is submitted to the Hon'ble Special Judge for Trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

Sd- [signature] 05/08/19

(N.K.RAVICHANDRAN),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.